பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2052 | தை 02 | வெள்ளிக்கிழமை 15.01.2021 | கதிர் 302

## 'கொரோனா'விலிருந்து 44,259 பேர் மீண்டார்கள்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 512 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 44 ஆயிரத்து 259 ஆக அதிகரித்துள்ளது.

☞ 2

# திருமலை பட்டணமும் சூழலும் சபையை இழந்தது கூட்டமைப்பு

## கால் நூற்றாண்டில் முதல் தடவையாக மொட்டுக் கட்சி பிடுங்கிக் கொண்டது

### ஐ.தே.கவும் மு.காவும் கூடக் காலை வாரின

திருகோணமலை, ஜனவரி 15

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் தவிசாளர் பதவியை கால் நூற்றாண்டில் முதல் தடவையாகப் பறிகொடுத்தது தமிழர் தரப்பு.

தமிழ்க் கூட்டமைப்பு வசம் இருந்த தலைவர் பதவியை ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் காலைவாரி, பொதுஜன பெரமுன கட்சியை ஆதரித்தனர் மொட்டுக் கட்சி வேட்பாளர் 12:10 என்ற வாக்கு வித்தியாசத்தில் பிரதேச சபைத் தலைவரானார்.

☞ 2

## 13 உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேறியது நல்லூர் 'பட்ஜட்'

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். நல்லூர் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 13 உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபை வரவு - செலவுத் திட்டம் இன்று தவிசாளர் ப.மயூரனால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

20 உறுப்பினர்களைக் கொண்ட நல்லூர் பிரதேச சபையில், வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 13 உறுப்பினர்களும், எதிராக இரண்டு உறுப்பினர்களும் வாக்களிக்க, மூன்று உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

☞ 2



ஐ.தே.கவுக்குள் வெடித்தது மோதல்

## நவீனும் ரணதுங்கவும் சஜித்துடன் இணைவு?

ஐக்கிய தேசியக் கட்சியில் பதவி மாற்றங்கள் இடம்பெற்றுள்ள நிலையில் கட்சிக்குள் மீண்டும் பிளவு ஏற்பட்டுளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

☞ 2

## மன்னார் மீனவர்கள் இருவர் இந்தியாவில் கரை ஒதுங்கினர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.15

மன்னார் முள்ளிக்குளத்தில் இருந்து கடற்றொழிலிற்குச் சென்ற இரு மீனவர்கள் இயந்திரக் கோளாறு காரணமாக இந்தியாவின் கரையை அடைந்துள்ளனர் என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னாரில் இருந்து புறப்பட்ட இரு மீனவர்களையும் காணவில்லை என நேற்றைய தினம் மன்னார் மாவட்டக்கடற்றொழில்நீரியல்வளத்துறைதிணைக்களத்திடம் மீனவர்களின் உறவுகளால் முறையிடப்பட்டது. இந்தத் தகவல் திணைக்களத்தினால் கடற்படையினரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

☞ 2

தடுப்பூசி பெற

## சீன ஜனாதிபதிக்கு கோட்டாபய கடிதம்



கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளை சீனாவிடம் இருந்து பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்குக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்தக் கடிதத்தை சீனாவுக்கான இலங்கையின் தூதுவர்பாலிதகோஹன, சீன வெளி விவகார அமைச்சின் நிறைவேற்றுப்

☞ 2

## மஹர சிறை வன்முறை தொடர்பில் 120 கைதிகளுக்கு எதிராக வழக்கு!

மஹர சிறைச்சாலை மோதலின்போது சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்து வன்முறையில் ஈடுபட்ட 120 கைதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரச சொத்துக்களுக்குச் சேதம்விளைவித்த குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி சந்தேகத்தின் அடிப்படையில்

☞ 2



## முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அமைக்கும் பணி மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை மீண்டும் அமைப்பதற்காக அத்திபாரம் வெட்டும்பணி மாணவர்களால் முன்னெடுக்கப்படுகிறது.

நேற்று முன்தினம், பல்கலைக்கழகப் பொறியியலாளர்கள் குறித்த பகுதியை அளவீடு செய்து அடையாளப்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் இன்று நினைவுத்தூபிக்கு மாணவர்களால் அத்திபாரம் வெட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

துரிதமாக குறித்த தூபி கட்டிமுடிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## அநுராதபுரத்தில் சிறுவர் இல்ல சிறுமிகள் மீது துஷ்பிரயோகம்

### பெண் தலைமைக் காவலாளர் விளக்கமறியலில்!

சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வரும் சிறுமிகளைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அவந்தி தேவி சிறுவர் இல்லத்தின் தலைமைக் காவலாளியை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தில் உள்ள அவந்தி தேவி சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வரும் குழந்தைகளை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் குறித்த சிறுவர் இல்லத்தின் தலைமை காவலாளியான 52 வயதுடைய பெண் நேற்று கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 13 உறுப்பினர்களின் ஆதரவுடன் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தோடு முன்னாள் தவிசாளர் உட்பட இரண்டு உறுப்பினர்கள் சபை அமர்பில் கலந்துகொள்ளவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சியியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் நடுநிலை வகிக்க, ரெலோ கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

அதேபோன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மூன்று உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களிக்க, இரண்டு உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர்.

அத்தோடு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதன் மூலம் சபையின் வரவு - செலவுத் திட்டம் 11 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

## மஹர சிறை வன்முறை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்துவைக்கப்பட்டிருந்த 116 கைதிகளுக்கும், சிறைத் தண்டனை அனுபவிக்கும் 4 கைதிகளுக்கும் எதிராக வழக்கு தொடுக்கப்படவுள்ளது.

அதேவேளை, சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலால் 6 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துக்கள் சேதமடைந்துள்ளன என்று சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

மஹர சிறைச்சாலை மோதல் சம்பவத்தில் 11 கைதிகள் கொல்லப்பட்டதுடன் 120 பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீன ஜனாதிபதிக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளருக்குக் கையளித்துள்ளார்.

இந்த ஆண்டு நடுப்பகுதிக்குள் இலங்கைக்கான தடுப்பூசிகளை இறக்குமதி செய்து, 70 வீதமான பொதுமக்களுக்கு வழங்க எதிர்பார்ப்பதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

கொரோனா மூன்றாம் அலை அல்லது தற்போது காணப்படும் இரண்டாம் அலையின் பரவல் நிலைமைகள் மேலும் விரிவடைய இடமளிக்காது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் சுகாதார அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

## நவீனும் ரணதுங்கவும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் இந்தப் புதிய நியமனங்கள் முன்னாள் பிரதமரும் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்றுள்ளதுடன்அந்தநிகழ்வுக்குரவிகருணாநாயக்க உட்பட கட்சியின் பல முக்கியஸ்தர்கள் சமுகமளிக்கவில்லை.

அர்ஜுன ரணதுங்க , நவீன் திஸாநாயக்க போன்றோர் மேற்படி நியமனங்களில் அதிருப்தியை தெரிவித்துள்ளனர் எனவும் கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

அதேவேளை, ஐ.தே.கவின் புதிய தவிசாளராக முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் புதிய செயலாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார நியமிக்கப்பட்டுள்ளதுடன் பொருளாளராக ஏ. எஸ். மிஸ்பா நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கிணங்க மீண்டுமொருபிளவுஏற்படவாய்ப்புள்ளது எனக் கூறப்படுகின்றது.

நவீன், அர்ஜுன போன்றவர்கள் விரைவில் சஜித் அணியில் இணையக் கூடும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

## மன்னார் மீனவர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேநேரம் இன்று அதிகாலை இந்தியாவின் கரையில் இயந்திரம் பழுதடைந்த நிலையில் கரையை அடைந்ததாகவும், இந்தியக் கரையோரக் காவல்படையினரால் இலங்கையின் இரு மீனவர்களும் படகுடன் மீட்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளமையோடு இரு மீனவர்களும் பாதுகாப்பாக உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவில் கரையொதுங்கிய படகில் அந்தோணிதாஸ் (வயது - 20 )மற்றும் அருள்தாஸ் (வயது - 18) ஆகிய இரு மீனவர்களுமே கரையொதுங்கியுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ‘கொரோனா’விலிருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் 6 ஆயிரத்து 389 பேருக்குத் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் 251 பேர் உயிரிழந்துள்ளனர்.

## திருமலை பட்டணமும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலையின் பட்டணமும் சூழலும் என்கின்ற பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் இரண்டு முறை தோல்விகண்டதை அடுத்து இன்று நடந்த தவிசாளர் தேர்வில் 25 வருடங்களாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வசமிருந்த அந்த சபையின் அதிகாரம் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குக் கைமாறியது.

மாகாணசபைத்தேர்தல்வரலாற்றின் ஆரம்பம் தொட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசமிருந்த திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கைப்பற்றியமையை அடுத்து பிரதேச சபையின் புதிய தலைவராக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியைப் பிரதிநிதித்துவம் செய்துவரும் ஆர்.ஏ.ரி.எஸ்.டீ. ரத்நாயக்க தெரிவானார். இன்று காலையே அவர் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன.

அதில் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையில் 22 உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

2018ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு 07 உறுப்பினர்களுடன் சபையை கைப்பற்றியது.

இன்று நடைபெற்ற வாக்கெடுப்பில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆதரவுக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் 12 வாக்குகள் பெற்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு 10 வாக்குகளே கிடைத்தன.

சபையில் கூடுதலான உறுப்பினர்கள் திறந்த வாக்கெடுப்புக்கு விருப்பம் தெரிவித்ததற்கமைய திறந்த வாக்கெடுப்பு நடைபெற்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் க.தங்கராசாவின் பெயர் முன்னாள் தவிசாளர் டாக்டர் ஞானகுணாளனினால் முன்மொழியப்பட்டு தமிழ்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் திருமதி ஆர். அமுதவல்லியினால் வழிமொழியப்பட்டது.

பொதுஜன பெரமுன சார்பில் உறுப்பினர் ரத்னாயக்காவின் பெயர் உறுப்பினர் ஏ.ஸி.பைரூஸால் முன்மொழியப்பட்டு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் எஸ்.பாலகிருஷ்ணனினால் வழிமொழியப்பட்டது.

மேலும் ஐக்கியதேசியக்கட்சியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களில் இரு உறுப்பினர்கள் பொதுஜன பெரமுன உறுப்பினருக்கு சார்பாகவும் மற்றைய உறுப்பினர் நவ்பர் (உபதலைவர்) தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினருக்கு ஆதரவாகவும் வாக்களித்தனர்.

அத்துடன் வரதர் அணி உறுப்பினர் சி. விபுசன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் எஸ்.பாலகிருஷ்ணன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் இருவர் ஆகியோர் பொதுஜன பெரமுன உறுப்பினருக்கு சார்பாக வாக்களித்தனர்.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் 3 உள்ளூராட்சி சபைகள் உள்ள நிலையில் இச்சபையை அது பறிகொடுத்தமை குறிப்பிடத்தக்கது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## நீதியாக நடக்கட்டும் நீதித்துறை

நாட்டின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

அரசமைப்புத் திருத்தங்கள் மூலம் நீதிமன்றின் சுயாதீனத் தன்மைக்குக் குந்தக நிலைமை ஏற்பட்டிருப்பதாக அது சுட்டிக் காட்டியிருக்கின்றது.

தவிரவும், கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்த பின்னர் கடந்த ஒரு வருட காலத்தில் இலங்கை நீதிமன்றங்கள் பதினெட்டு வழக்குகளில் வழங்கிய தீர்ப்புகள் இப்போது பட்டியலிடப்படுகின்றன.

* 'அவன்காட்' ஆயுதக் களஞ்சிய வழக்கில் கோட்டாவின் சகாக்களான நிஸங்க சேனாதிபதி, மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ ஆகியோர் விடுதலை.
* தாஜுதீன் கொலை வழக்கில் சகல சந்தேக நபர்களும் விடுதலை.
* கொலைக்குற்றவாளி பிரேம்லால் விஜயசேகரா நாடாளுமன்றம் செல்ல அனுமதி.
* தொல்பொருள் சேதப்படுத்திய வழக்கில் மஹிந்தரின் சகாவான குருநாகல் மேயரைக் கைது செய்யத் தடை.
* 'ரடா' நிறுவனத்தில் 12 கோடி 40 லட்சம் ரூபா மோசடி வழக்கில் டிரான் அலஸ் விடுதலை.
* 'ரில்' துணிக் கொள்வனவு என்ற பெயரில் நடந்த அறுபது கோடி ரூபா மோசடி வழக்கில் மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் அனு பல்பிட்ட ஆகியோருக்கு எதிரான குற்றத் தீர்ப்புத் தள்ளுபடி.
* கொலை வழக்கில் இருந்து அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் விடுதலை.
* லலித், குகன் கடத்தல் வழக்கில் கோட்டாவுக்கு விடுவிக்கப்பட்டிருந்த அழைப்பாணை ரத்து.
* 20 கோடி ரூபா அரச நிதி துஷ்பிரயோக வழக்கில் பஸிலுக்கு எதிரான வெளிநாட்டுப் பயணத் தடை ரத்து.
* மிக் விமானக் கொள்வனவில் 15 லட்சம் டொலரைத் தனிப்பட்ட கணக்குக்கு மாற்றிய வழக்கில் சர்வதேச பொலிஸாரால் தேடப்பட்டு வந்த மஹிந்தவின் மைத்துனர் உதய வீரதுங்கவுக்கு பிணை அனுமதி.
* பல வழக்குகளில் தொடர்புபட்டிருந்த பிள்ளையானுக்கு ஜோஸப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் இருந்து விடுதலை.
* நூறு கோடி ரூபா வரி மோசடி வழக்கில் சீல் வைக்கப்பட்டிருந்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மதுபானத் தொழில் உரிமம் எந்தத் தண்டனையுமின்றி மீள வழங்க உத்தரவு.
* கொழும்பில் பதினொரு தமிழர்கள் கடத்திக் காணாமலாக்கப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட மீதான விசாரணைக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை.
* அதே வழக்கில் சாட்சிகளை அச்சுறுத்திய மற்றும் நீதிமன்றத்துக்கு எதிராகக் கருத்து வெளியிட்ட மேஜர் அஜித் பிரசன்னவுக்கு பிணை அனுமதி.
* அரசுக்கு 4 கோடி ரூபா நஷ்டம் ஏற்படுத்திய வழக்கில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ விடுதலை.
* 36 கோடி ரூபா மோசடியுடன் தொடர்புபட்ட ஜோஷித ராஜபக்ஷவின் தொலைக்காட்சி நிறுவனம் மீண்டும் இயங்க நீதிமன்றம் அனுமதி.
* டி.ஏ.ராஜபக்ஷ நினைவுத் தூபி அமைக்க அரச நிதி மூன்று கோடி முப்பது லட்சத்தைத் தவறாகப் பயன்படுத்திய வழக்கில் இருந்து கோட்டாபய ராஜபக்ஷ விடுவிப்பு.

– இவை எல்லாம் கடந்த வருடத்தில் பலரின் கவனத்தையும் ஈர்த்த முக்கிய நீதிமன்ற உத்தரவுகள்.

இவை எல்லாம் முறையற்ற விதத்தில் வழங்கப்பட்ட உத்தரவுகள் என்று ஒரேயடியாக நாம் குற்றம் சுமத்த வரவில்லை.

*"நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமின்றி, நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்."* என்பது நீதித் துறையில் ஒரு மகா வாக்கியம்.

மேற்படி உத்தரவுகள் – தீர்ப்புகள் – கடந்த ஒரு வருட காலத்துக்குள், கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்று ஒரு வருடத்துக்குள், வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவுகள்.

கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை வல்வந்தமாக எரிக்கும் நடவடிக்கைக்கு எதிராக முஸ்லிம்களினால் முன்வைக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களைக் காரணம் காட்டாமல் பரிசீலனைக்குக் கூட ஏற்றுக் கொள்ளாமல் உயர் நீதிமன்றம் நிராகரித்தமை, ஊழல், மோசடிகளுக்கு எதிராகப் போராடிய ரஞ்சன் ராமநாயக்கா எம்.பி. உள்ளே தள்ளப்பட்டமை போன்ற வழக்குகளும் சிரத்தைக்கும், கவனிப்புக்கும் உள்ளாக்கியிருக்கின்றன.

இவை எல்லாம் இந்தத் தீவில் நீதி சுத்தமான நிலைநாட்டப்படுகின்றது என்ற நம்பிக்கையை மக்கள் மத்தியில் சந்தேகத்துக்கு அப்பால் ஏற்படுத்தவில்லை என்பதுதான் யதார்த்தம்.

2015 இற்கு முன்னர் இருண்ட ஆட்சிக் காலத்தில் சீர் கெட்டிருந்த இலங்கையின் நீதித்துறை அதன் பின்னர் சம்பாதித்த நற்பெயரை – நம்பிக்கையை – இழக்காமல் பார்த்துக் கொள்வது இலங்கையின் நீதித்துறையின் தலையாய கடமையாகும்.

# சிறை செல்ல மைத்திரியும் தயாராகுதல் வேண்டுமாம்!



### அக்மீமன தயாரத்ன தேரர் ஆரூடம்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் சிறைக்குச் செல்லத் தயாராக வேண்டும் என அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தங்கியுள்ள ரோஹிங்கிய அகதிகளுக்கு எதிரான போராட்டத்துக்குத் தலைமை தாங்கிய நிலையில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில் –

ரஞ்சன் ராமநாயக்க தித்த தம்ம வேதானிய கர்மாவின் காரணமாகவே சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் சிறைக்குச் செல்ல தயாராக இருக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# மன்னார் வைத்தியசாலையிலிருந்து தப்பிய கொரோனா நோயாளி மடக்கிப் பிடிப்பு!

மன்னார், ஜன.15

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட ஒருவர், அங்கிருந்து தப்பிச்சென்ற நிலையில் பாதுகாப்பு தரப்பினரால் மடக்கி பிடிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் கொரோனா தொற்றாளர் ஒருவருக்கு உதவியாக அவரது மகன் அந்த விடுதியில் தங்கி இருந்து உதவிகளை மேற்கொண்டு வந்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த உதவியாளரான மகனுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின்போது அவருக்கும் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டது.

இந்த விடயத்தை அறிந்த உதவியாளரான மகன், நேற்று (வியாழக்கிழமை) மதியம், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் தனிமைப்படுத்தல் விடுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

துரித நடவடிக்கைகளை மேற்கொண்ட வைத்தியசாலை நிர்வாகம், பாதுகாப்பு தரப்பினரின் உதவியுடன் நேற்று மாலை மன்னார் எழுத்தூர் பகுதியில் வைத்து அவரை மடக்கி பிடித்துள்ளனர்.

மேலும் அந்த நபரை, சிகிச்சைக்காக உரிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தனிமைப்படுத்தலின் போது வெளிநாட்டவர்கள் முறைகேடுகளில் ஈடுபடுபவர்கள் கைதாவர்!

### இராணுவத் தளபதி எச்சரிக்கை

வெளிநாடுகளிலிருந்து வருபவர்களைத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளின்போது, முறைகேடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து சட்ட நடவடிக்கைமேற்கொள்ளப்படுமெனகொரோனா வைரஸ் ஒழிப்பு தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.



கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் இராணுவத்தினரின் பங்களிப்பு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது சவேந்திர சில்வா மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை உயர்மட்டத்தில் மிக நம்பிக்கையானதாக இராணுவத்தினர் முன்னெடுத்துச் செல்லும் நிலையில் அவர்கள் கட்டியெழுப்பியுள்ள நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் சிலர் செயற்படுகின்றனர். அதற்கு எந்த வகையிலும் இடமளிக்க முடியாது.

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புவோரைத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்காக ஹோட்டல்களுக்கு அனுப்பும்போது அங்கு அதிகளவு பணம் அவர்களிடம் அறவிடப்படுவதாகவும் அத்துடன் இரண்டாம் தரப்பு நபர்கள் மோசடிகளில் ஈடுபடுகின்றனர் என வும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனவே அதற்கு இடமளிக்கக் கூடாதென ஹோட்டல் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

கொரோனா வைரஸ் இரண்டாவது அலையின் பின்னரே இதுபோன்ற மோசடிகள் இடம்பெற்று வருகின்றன. அத்தகையோர் இனங்காணப்பட்டு கைது செய்யப்படுவர்.- என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சில நாடுகளில் பரவும் நிபா வைரஸ் தீவிர கண்காணிப்புகளில் இலங்கை!

உலக நாடுகள் சிலவற்றில் நிபா வைரஸ் கண்டறியப்பட்டுள்ள நிலையில், அந்த வைரஸ் தொடர்பில் இலங்கை தீவிரமாகக் கண்காணித்துவருவதாக பொது சுகாதார சேவைகளின் துணை பொது பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நிபா வைரஸ் தொடர்பில் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்–

இலங்கையில் கொரோனா வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்தவும், வைரஸின் பிறழ்ந்த பதிப்புகளைக் கண்டறியவும் நடவடிக்கை எடுக்கும்போது, நிபா வைரஸ் உட்பட பிராந்தியத்தில் பரவும் பிற வைரஸ்களை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

எவ்வாறாயினும், கடுமையான நடவடிக்கை எடுக்க இலங்கைக்கு உலக சுகாதார அமைப்பிலிருந்து எந்த பரிந்துரையும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் நாங்கள் நிலைமைகளைக் கண்காணித்து வருகிறோம். – என்று அவர் கூறினார்.

வைரஸ் தொடர்பான எந்தவொரு தகவலையும் உலக சுகாதார நிறுவனம் இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். தொற்றுநோயியல் பிரிவு மற்றும் சுகாதார அமைச்சின் தனிமைப்படுத்தப்பட்ட பிரிவு ஆகியவை பிற நாடுகளில், குறிப்பாக பிராந்தியத்தில் வைரஸ்கள் பரவுவதால் ஏற்படும் பாதிப்புகளைக் கண்காணித்து வருகின்றன.

அவை சர்வதேச சுகாதார விதிமுறைகள் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு மைய புள்ளியாகும். மற்ற நாடுகளில் நோய் பரவுவதை அவை கண்காணிக்கின்றன.

எந்தவொரு வைரஸிலிருந்தும் இலங்கைக்கு அச்சுறுத்தல் இருந்தால் அது தொடர்பாக தொற்றுநோயியல் பிரிவு மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பிரிவு தெரிவிக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவில் சகல இளைஞர்களும் திருக்குறளைப் படிக்க வேண்டும்!

## வள்ளுவர் தினத்தில் மோடி தமிழில் செய்தி

புதுடெல்லி,ஜன.15

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு செய்தி வெளியிட்டுள்ள பிரதமர் மோடி இந்தியா முழுவதிலும் வாழும் இளைஞர்கள் திருக்குறளைப் படிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

எக்காலமும் மாறாத அறத்தை எடுத்துரைக்கும் உலகப் பொதுமறை நூலான திருக்குறளை இவ்வுலகிற்கு வழங்கிய திருவள்ளுவரை போற்றும் வகையில் தை மாதம் 2 ஆம் நாள் திருவள்ளுவர் தினமாக கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு திருவள்ளுவருக்கு உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

இதையடுத்து பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் திருவள்ளுவர் தினத்திற்கு தமிழில் வாழ்த்து தெரிவித்துள்ளார். சமீப காலமாக பிரதமர் மோடி பல்வேறு இடங்களில் பேசும் போது திருக்குறளை



மேற்கோள் காட்டி பேசுகின்றமையை வழக்கமாகக் கொண்டுள்ளார். திருக்குறளின் பெருமைகள் குறித்தும், அதை அனைவரும் படிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் அவர் பலமுறை சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த வகையில் இன்று அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், இந்தியா முழுவதிலும் வாழும் இளைஞர்கள் திருக்குறளைப் படிக்க வேண்டும் என தான் வலியுறுத்துவதாக குறிப்பிட்டுள்ளார். போற்றுதலுக்குரிய திருவள்ளுவரை அவரது பிறந்தநாளில் வணங்குவதாகவும், அவரது சிந்தனைகளும் படைப்புகளும் அவரது மகத்தான அறிவையும் அவருக்கு வாய்த்த ஞானத்தையும் பிரதிபலிப்பதாகவும் மோடி கூறியுள்ளார்.

மேலும் திருக்குறளை எழுதிய திருவள்ளுவரின் லட்சியங்கள் பல தலைமுறைகளைக் கடந்து இன்று வரை மக்களிடம் ஆக்கப்பூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன எனவும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

## வாட்ஸ் ஆப் நிறுவனம் மீது இந்திய நீதிமன்றத்தில் மனு



வாட்ஸ் ஆப் தனிநபர் அந்தரங்கத்தில் தலையிடுவதற்கு எதிராக டெல்லி உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தேச பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக விளங்குவதாக மனுதாரர் குற்றம் சாட்டியுள்ளார்.

அண்மையில் வாட்ஸ் ஆப் தனது விதிகளையும் தனிநபர் கொள்கைகளையும் மாற்றி, பயனாளர்கள் அதற்கு உடன்படா விட்டால் தங்கள் கணக்கை நீக்கி விடும்படி அறிவித்துள்ளது.

இதனால் தங்கள் தனிப்பட்ட உரிமைகள் மீறப்படலாம் என்ற அச்சம் அதன் வாடிக்கையாளர்களிடையே எழுந்துள்ளது. பல லட்சம் பேர் தங்கள் வாட்ஸ் ஆப் கணக்கை நீக்கி விட்டு இதர செயலிகளுக்கு மாறிக் கொண்டிருக்கின்றனர்.

## வங்கி மோசடி வழக்கை மூடிமறைப்பதற்கு சி.பி.ஐ. அதிகாரிகளே லஞ்சம் வாங்கினராம்!

### வேலியே பயிரை மேய்ந்த கதை

வங்கி மோசடி வழக்குகளில் விசாரணையை தாமதப்படுத்த லஞ்சம் வாங்கினர் என சி.பி.ஐ. (மத்திய புலனாய்வுத் துறை) அதிகாரிகள் 4 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் சி.பி.ஐ. தலைமையகம் உள்பட 14 இடங்களில் சோதனை நடத்தப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெரிய வர்த்தக நிறுவனங்கள் ஆயிரக்கணக்கான கோடி ரூபா பணம் கடன் பெற்று திருப்பித் தராமல் சிக்கியுள்ளன. இந்த வழக்குகளை மூடிமறைப்பதற்காக சி.பி.ஐ. அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்ட அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

சில சி.பி.ஐ. அதிகாரிகளையே குற்றம் சாட்டியுள்ள சி.பி.ஐயின் லஞ்ச ஒழிப்புத்துறை தனது தலைமையகத்திலேயே சோதனை நடத்தியுள்ளது. டெல்லி, குர்கான், நொய்டா, மீரட், கான்புர்., காசியாபாத் உள்பட 14 இடங்களில் அதிகாரிகளின் வீடுகள் மற்றும் சி.பி.ஐ. அலுவலகங்களில் சோதனை நடைபெற்றதாகத் தகவல் வெளியாகி உள்ளது. டெல்லியில் உள்ள சி.பி.ஐ. தலைமை




அலுவலகத்திலும் இந்தச் சோதனை நடைபெற்றதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் காசியாபாத் சி.பி.ஐயில் டி.எஸ்பியாக பணிபுரியும் ஆர்.கே.ரிஷி, இன்னொரு டி.எஸ்.பியான சங்க்வான், இன்ஸ்பெக்டர் கபில் தன்வந்த், ஸ்டெனோவாக பணிபுரியும் சமீர் குமார் சிங் ஆகிய 4 சி.பி.ஐ. அதிகாரிகள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சி.பி.ஐ. செய்தித் தொடர்பாளர் ஆர்.சி. ஜோஷி தெரிவித்துள்ளார். அவர்கள் மீது அதிகார துஷ்பிரயோகம் செய்தல், தனியார் நிறுவனத்திற்கு சாதகமாக நடந்துகொள்ள லஞ்சம் வாங்கியது உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## லொறியும் வானும் நேருக்கு நேர் மோதி அப்பளமாக நொறுங்கின; 11 பேர் சாவு!

ஹுப்ளி,ஜன.15

கர்நாடக மாநிலம் ஹுப்ளி அருகே சுற்றுலா வானும் டிப்பர் லொறியும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர்.

கர்நாடக மாநிலம் தவனகரே பகுதியிலிருந்து 16 பெண்கள் விடுமுறைய கழிக்க வான் ஒன்றில் கோவா நோக்கிச் சென்றுள்ளனர். லிட்டிகட்டி என்ற இடத்தின் அருகே எதிரே வேகமாக வந்த டிப்பர் லொறியும் சுற்றுலா வானும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன.



இதில் இரண்டு வாகனங்களுமே அப்பளம் போல நொறுங்கி உருக்குலைந்தன. சுற்றுலா வானின் டிரைவர் பிரவீன் மற்றும் வானில் இருந்த 10 பெண்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

பலியானவர்கள் ஆஷா, மீராபாய், பரஞ்ஜோதி, ராஜேஸ்வரி, சகுந்தலா, உா, வேதா, வீணா, மஞ்சுளா, நிர்மலா, ரஜனீஷ், சுவாதி ஆகியோர் என அடையாளம் காணப்பட்டு உள்ளது. ஐந்து பெண்கள் மற்றும் டிப்பர் டிரக்கின் டிரைவர் பலத்த காயம் அடைந்து தற்போது ஹுப்ளியில் உள்ள கிம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பலியானவர்களில் தவனகரே ஜகலூரைச் சேர்ந்த பா.ஜ.க. முன்னாள் எம்.எல்.ஏவின் மருமகள், பிரீத்தி ரவிக் குமாரும் ஒருவர் ஆவார். முன்னாள் எம்.எல்.ஏ குரு சித்தனகவுடாவின் மருமகள் ஆவார்.

11 பேரின் மரணத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டு உள்ள டுவிட்டில் "கர்நாடகாவின் தார்வாட் மாவட்டத்தில் சாலை விபத்து காரணமாக உயிர் இழப்பு ஏற்பட்டதில் வருத்தம். இந்த சோகமான நேரத்தில் அவர்களது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவாக குணமாகப் பிரார்த்தனை செய்கிறேன். எனக் கூறி உள்ளார்."


# கல்யாணமாலை



வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1989.03.12 | பிறந்த திகதி - 1985.10.22 |
| மதம் - இந்து V | மதம் - இந்து |
| நட்சத்திரம் - கார்த்திகை | நட்சத்திரம் - திருவோணம் |
| செவ் - 1 இல் | செவ் - 1 இல் |
| பாவம் - 29 | பாவம் - 60 |
| கல்வி - BSc - Engineering | கல்வி - BA. பட்டதாரி |
| தொழில் - Engineer | தொழில் - ஆசிரியை |
| எதிர்பார்ப்பு - Engineering or Doctor | எதிர்பார்ப்பு - அரசாங்க உத்தியோகம் |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை

077 3434 415
077 8578 528



# இந்தோனேசியாவில் நிலநடுக்கம் மருத்துவமனை தரைமட்டம்

இந்தோனேசியாவின் சுலவேசி தீவில் இன்று நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.2 அலகாக பதிவாகியிருந்த இந்த நிலநடுக்கம் காரணமாக, அப் பகுதியில் உள்ள கட்டிடங்கள் கடுமையாக அதிர்வுக்குள்ளாகின. இதனால் பொது மக்கள் அவசரம் அவசரமாக வீடுகளை விட்டு வெளியேறினர்.

அங்குள்ள மருத்துவமனை ஒன்று முற்றாக வீழ்ந்து தரைமட்டம் ஆகியதில் நோயாளிகள் மற்றும் ஊழியர்கள் பலரும் உள்ளே சிக்கி கொண்டுள்ளனர்.

மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்குச் சென்று கட்டிட இடிபாடுகளை அகற்றி மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இடிபாடுகளில் சிக்கி சுமார் 35 பேர் உயிரிழந்திருப்பதாகவும், ஏராளமானோர் காயமடைந்ததாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

# ஜோர்தான் மன்னருக்கு கொரோனா தடுப்பூசி

ஜோர்தான் நாட்டில் கொரோனா தடுப்பூசி வழங்கும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் முதலாவதாக மன்னருக்கும் அதை தொடர்ந்து அவரது உறவினர்களுக் கும் அம்மானில் உள்ள மருத்துவமனையில் தடுப்பூசி வழங்கப்பட்டது.

சீனாவின் சினோபார்ம் மற்றும் பைஸர் ஆகிய தடுப்பூசிகளே மக்களுக்கு செலுத்தப்பட உள்ளன.

இன்னும் சில மாதங்களில் 20 முதல்25சதவீதமக்களுக்குகொரோனா தடுப்பூசி போடப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# ஆக்ஸிஜன் சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக பிரேசிலில் கொரோனா நோயாளிகள் தவிப்பு

பிரேசில் நாட்டில் உள்ள மனாஸ் நகரத்தில் ஏற்பட்டுள்ள கடும் ஆக்ஸிஜன் சிலிண்டர் தட்டுப்பாட்டால் கொரோனா நோயாளிகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

20 லட்சம் மக்கள் கொண்ட மனாஸ் நகரம் தற்போது ஆக்ஸிஜன் சிலிண்டர் தட்டுப்பாட்டால் தவித்து வருகிறது. அங்கே இரண்டாவது அலை வீச தொடங்கியுள்ள நிலையில், அனைத்து மருத்துவமனைகளிலும் ஆக்ஸிஜன் சிலிண்டர் தீர்ந்து விட்டதாகவும், இதனால் கடந்த சில தினங்களில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



இதனையடுத்து, ஆக்ஸிஜன் சிலிண்டர்களை தந்து உதவுமாறு மனாஸ் மக்கள் உலக நாடுகளிடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

# தெற்கு கலிபோர்னியாவில் காட்டுத் தீ ஆயிரக்கணக்கான மரங்கள் தீக்கிரை

அமெரிக்காவின் மேற்கு மாகாணமான கலிபோர்னியாவில் காடுகள் அதிகளவில் உள்ளதால் அங்கு அவ்வப்போது காட்டுத் தீ ஏற்படுகிறது. அந்த வகையில், தெற்கு கலிபோர்னியாவில் பெரும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது.

இதனால் வனப்பகுதியில் 20 முதல் 30 ஏக்கர் பரப்பளவில் தீ பற்றியுள்ளது. காட்டுத்தீயை அணைக்கும் பணியில் தீயணைப்புத் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

காட்டுத் தீயால் ஆயிரக்கணக்கான நுழிவ வகை மரங்கள் தீயில் கருகிஉள்ளநிலையில் பலத்த காற்று காரணமாக 250 ஏக்கர் பரப்பளவிற்கு தீ பரவ வாய்ப்புள்ளதாக அஞ்சப்படுகிறது.



# அதிபர் மற்றும் துணை அதிபரை வரவேற்க வண்ணக்கோலங்களுடன் அமெரிக்க இந்தியர்



அடுத்த அமெரிக்க அதிபராக தேர்தெடுக்கப்பட்ட ஜோ பைடன் மற்றும் துணை அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட கமலா ஹரிஸை வரவேற்கும் விதத்தில் ஆயிரம் டைல்ஸ் கொண்டு அமெரிக்க நாடளுமன்ற கட்டடம் முன் அமெரிக்க வாழ் இந்திய மக்கள் கோலம் போட்டுள்ளனர்.

தற்போது அதிபராக பொறுப்பேற்கவுள்ள ஜோ பைடனின் பதவியேற்பு விழாவுக்கு அமெரிக்கா ஆயத்தமாகி வருகிறது. இந்த வருடம் அமெரிக்காவின் பன்முகத்தன்மை காக்கப்பட்டு, அனைத்து பிரச்சினைகளும் நீங்கும் என்ற நம்பிக்கையின் அடையாளமாக இந்த கோலம் போடப்பட்டுள்ளதாக இந்தியர்கள் கூறுகின்றனர்.

மேலும் இதனை தொடர்ந்து , www.2021kolam.com என்ற இணையதள பக்கம், ஜோ பைடன் மற்றும் கமலா ஹரிஸை வரவேற்கும் விதமாக கோலப் போட்டி ஒன்றை நடத்திவருகிறது .

# அறிகுறி இல்லாமல் கொரோனா பரவல் ஹைலோங்ஜியாங் மாகாணத்தில் அவசரநிலை

சீனாவின் ஹைலோங்ஜியாங் மாகாணத்தில் கொரோனா பரவல் காரணமாக திடீரென அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.இதனால் அத்தியாவசிய தேவைகளுக்காகவே மக்கள் வெளியில் நடமாடலாம் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த திடீர் அவசர நிலையால் 3.7 கோடி மக்கள் புதன்கிழமை முதல் தங்கள் வீடுகளிலேயே முடங்கி உள்ளனர்.

ஹைலோங்ஜியாங் மாகாணத்தை பொறுத்தமட்டில் புதன்கிழமை மட்டும் 28 பேர்களுக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது,அதில் 12 பேர்களுக்கு எவ்வித அறிகுறியும் இல்லை எனத் தெரியவந்துள்ளது. இதனால்,

கொரோனா பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. இதனையடுத்தே மாகாணம் முழுவதும் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே தலைநகர் பீஜிங் அருகே அமைந்துள்ள ஹூபே மாகாணத்தில் கடும் குளிர் மற்றும் பனிப்பொழிவினூடே லட்சக்கணக்கில் பொது மக்கள் கொரோனா தடுப்பூசியின் இரண்டாம் கட்ட மருந்தை பெற்றுக்கொண்டுள்ளனர்.

சுமார் 7.5 கோடி மக்கள் தொகை கொண்ட ஹூபே மாகாணம், சமீபத்தில் உருமாறியுள்ள புதிய வீரியம் மிக்க கொரோனாவால் அதிக பாதிப்புக்கு உள்ளானதாக கூறப்படுகிறது. 2019 இல் வுஹான் நகரில் கொரோனா பரவல் கண்டறிந்ததன் பின்னர் சீனா கடுமையான ஊரடங்கு விதிகளை நடைமுறை படுத்தி பெரும்பாலான மாகாணங்களில் கொரோனா பெருந்தொற்றை விரைந்து கட்டுக்குள் கொண்டு வந்தது



# இந்தியாவிடமிருந்து கொரோனா தடுப்பூசி பெற்றுக்கொள்ள அரசாங்கம் தீர்மானம்!

## சுகாதார பணிப்பாளர் தெரிவிப்பு



கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த பயன்படுத்தவுள்ள தடுப்பூசிகளை இந்தியாவில் இருந்து கொள்வனவு செய்ய இலங்கை அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும் பெப்ரவரி மாதத்தில் இதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தை கடந்துள்ள நிலையில் நாட்டில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தக் கொண்டுவரவுள்ளதாகக் கூறப்படும் தடுப்பூசிகள் தொடர்பிலான நடவடிக்கைகள், தற்போதைய சுகாதார நிலைமைகள் தொடர்பாக அவர் இவ்வாறு கூறினார்,

அவர் மேலும் கூறுகையில் -

கொரோனா தடுப்பூசிகள் தொடர்பாக பேச்சுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டே வருகின்றன, அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுடன் இது தொடர்பாகத் தூதரக மட்டத்திலான பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் இங்கிலாந்தின் 'ஒக்ஸ்போர்ட் - அக்ஸ்டோனிக்' தடுப்பூசிகளை இலங்கைக்குப் பெற்றுக்கொள்ளவே பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கான வாய்ப்புகளும் அதிகமாக உள்ளன, இந்நிலையில் இங்கிலாந்தின் இந்த தடுப்பூசிகளை இந்தியாவில் உற்பத்தி செய்கின்றமை தொடர்பாக உடன்படிக்கை ஒன்று கைச்சாதிடப்பட்டுள்ளமையை அடுத்து எம்மால் இந்த தடுப்பூசிகளை இந்தியாவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது.

எனவே இந்தியாவிடம் இருந்து கொரோனா தடுப்பூசிகளை பெற்றுகொள்வது குறித்து பேச்சுகள் ஆரம்பித்துள்ளோம்.

எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் இருந்து இதற்கான உடன்படிக்கை மட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும், வெகு விரைவில் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளவே நாம் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அதேபோல் தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டுவர முன்னர் இலங்கையில் நாம் என்ன செய்ய வேண்டும், களஞ்சியப்படுத்துவது எவ்வாறு, எத்தனை நாள்களுக்குள் தடுப்பூசிகளை பயன்படுத்த வேண்டும்,

எவ்வாறு சகல பகுதிகளுக்கும் இவற்றை பங்கிடுவது போன்ற விடயங்கள் தொடர்பாகத் தொற்றுநோய் தடுப்பு பிரிவின் விசேட வைத்தியர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையுடன் அவர்கள் இப்போதே இது தொடர்பாக ஆராய்வு வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.

மேலும் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுநோய் அடையாளம் காணப்பட்டாலும் கூட இன்னமும் சமூகப் பரவலாக இது மாற்றம் பெறவில்லை என்பது ஆரோக்கியமான விடயமாகக் கருதப்பட வேண்டும்.

வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்களில் நாம் வெற்றிகண்டு வருகின்றோம். உலகநாடுகளில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நாடுகளில் நாம் முன்னணியில் உள்ளோம்.

எமது நாட்டின் சுகாதார சேவைகளின் தரம் உயர்வாக உள்ளமையும் மக்கள் விதிமுறைகளுக்கு கட்டுப்படுகின்றமையுமே இவற்றுக்குக் காரணமாகும். - என்றார்.



# தெற்காசியாவின் பாரிய டயர் உற்பத்தி தொழிற்சாலை ஜனாதிபதியால் திறப்பு!

தெற்காசியாவின் பாரிய டயர் உற்பத்தி தொழிற்சாலை நேற்று வியாழக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் ஹொரணையில் திறந்து வைக்கப்பட்டது.

புதிய தொழிற்சாலை ஹொரணையில் ஏற்றுமதி செயலாக்க மண்டலத்தில் அமைந்துள்ளது. அதிநவீன ஐரோப்பிய தொழில்நுட்பத்துடன், தொழிற்சாலையின் பெரும்பாலான தயாரிப்புகள் ஏற்றுமதிக்காக தயாரிக்கப்படுகின்றன.

இந்த தொழிற்சாலையில் சிறிய கார்கள் முதல் கனரக வாகனங்கள் வரை அனைத்து பிரிவுகளுக்கும் டயர்களை தயாரிக்கலாம். இதன் கீழ் ஏராளமான வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமைதிக்கான ஆசிய பௌத்த சம்மேளனம் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றுள்ளது!



அமைதிக்கான ஆசிய பௌத்த சம்மேளனம் 13 ஆவது நிறைவேற்று கவுன்சில் கலந்துரையாடல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இன்று ஸ்ரீ சம்போதி விஹாரையில் இடம்பெற்றது.

இரண்டாம் உலக மகா யுத்தத்துக்குப் பின்னர் ஒற்றுமையை இலக்காகக் கொண்டு ரஷ்யா மற்றும் மொங்கோலிய நாட்டு பௌத்த தலைவர்கள் அனைத்து நாடுகளினதும் பௌத்த அமைப்புக்களின் தேவை தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டது.

இதன் பிரதிபலனாக 1970 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி மொங்கோலியாவின் ஹுலன்பட்டார் நகரத்தில் அமைந்துள்ள பௌத்த விகாரையில் ஒன்று கூடிய பௌத்த தலைவர்கள் ஆசியாவின் அமைதிக்கான சம்மேளனத்தின் முதல் கலந்துரையாடலை நடத்தினர். இரண்டாவது கலந்துரையாடல் இலங்கையில் இடம்பெற்றுள்ளது.

இன்றுவரையில் உலகளாவிய ரீதியில் உள்ள பௌத்த நாடுகள் இந்த அமைப்பில் உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டுள்ளன.

இந்நிலையில் 13 ஆவது நிறைவேற்று கவுன்சிலின் சம்மேளனத்தை இலங்கையில் நடத்துவதற்கு இலங்கைக்கு அனுமதி கிடைத்துள்ளது.

கொவிட்- 19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் இந்த சம்மேளனத்தை இலங்கையில் நடத்த அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும். இதனூடாக ஏனைய நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்த முடியும் என பௌத்த சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

'சூம்' தொடர்பாடல் முறைமை ஊடாக இடம் பெற்ற இந்தச் சம்மேளனத் தில் 25 நாடுகளைசேர்ந்த உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். பேராசிரியர் மெதகொட அபேதிஸ்ஸ தேரர் சம்மேளனத்தின் நோக்கத்தைத் தெளிவுப்படுத்தினார்.

மல்வத்துபீடத்தின் அனுநாயக்க நியாங்கொட விஜித சிறிநாஹின்யோ தேரர் கொவிட்-19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் பௌத்தர்களின் நடவடிக்கை என்ற தலைப்பில் ஆரம்ப உரை நிகழ்த்தினார். நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ பிரதான உரையாற்றினார். இதன் போது மொங்கோலிய நாட்டு பிரதமர் ஹுீக்ஹான் ஜின் குரேல்சுக் காணொளி ஊடாக உரையாற்றினார்.

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த கிளிநொச்சியில் பொங்கல்!



அனைத்துமதங்களுக்குள்ளும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொங்கல் நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கரிதாஸ்வன்னி கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இலங்கையில் அனைத்து மதங்களிற்குள்ளும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொங்கல் நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது.

கரிதாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் அருட்பணி செபமாலை செபஜீவன் தலைமையில் இந்த பொங்கல் நிகழ்வு உதயநகர் கிழக்கு முதியோர் சங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கரிதாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் அருட்பணி செபமாலை செபஜீவன், மௌளவி எம். எஸ். யமீன், கிராம சேவையாளர் த. குணசிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முதியோர் சங்கத்தின் 45 உறுப்பினர்களுடன் இணைந்து கொண்டாடப்பட்ட இந்தப் பொங்கல் நிகழ்வு, சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=





கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.01.2021இல் வெளியிடப்பெற்றது.

## அமரர் பேணாட் மதுரநாயகம் நினைவு

# கவிதைப் போட்டி முடிவுகள்

### 1. பாடசாலை மாணவர்களுக்கானது [தரம் 1 முதல் 12 வரை]

**"கை கழுவினார்கள்....."**

**1ம் பரிசு - 3000/- :-** அன்னலிங்கம் அபிநயா,
நாவற்கிணற்றடி,
குப்பிளான் தெற்கு,
குப்பிளான்.

**2ம் பரிசு - 2000/- :-** அம்பிகை சண்முகலிங்கம்,
அம்பலவாணர் பாதை,
திருநெல்வேலி.

**3ம் பரிசு - 1000/- :-** இம்தியாஸ் பாத்திமா இன்ஷிபா
4/சி /2,
மடவலி றோட்,
பொல்கொல்ல

### 2. பெரியவர்களுக்கானது [வயது எல்லை கிடையாது]

**"முகத்தின் முகவரிகளைத் தொலைத்தோம்...."**

**1ம் பரிசு - 5000/- :-** பிரதாயினி ஸ்ரீராகவராஜன்,
35பி, விவேகானந்தா வீதி,
கொழும்பு - 06

**2ம் பரிசு - 3000/- :-** லோ.மேரி நிறோசனா,
தாதியர் பயிற்சி கல்லூரி,
யாழ்ப்பாணம்.

**3ம் பரிசு - 1000/- :-** ஏ.கரஜன்,
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

அமரர் பேணாட் மதுரநாயகம் நினைவுக்கவிதைப் போட்டியில் பெருமெண்ணிக்கையான போட்டியாளர்கள் பங்குபற்றியமையையிட்டு நினைவுப்போட்டிக்குழுவினர் பெருமகிழ்வு அடைவதுடன் தாங்கள் தமிழ் மீதும், கவிதை மீதும் கொண்டிருக்கும் அன்பையும், ஆதரவையும் கௌரவிக்கும் வகையில் மிகச்சிறந்த 25 போட்டியாளர்களுக்கு சான்றிதழ் கௌரவத்தை வழங்கி கௌரவிக்கின்றோம். மேற்படி வெற்றியாளர்களின் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை 24.01.2021 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு காலைக்கதிர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு

**போட்டி ஏற்பாட்டாளர்:- திரு.ஜொணி மதுரநாயகம். இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

## கௌரவ சான்றிதழ் பெறுவோர்

**"கை கழுவினார்கள்....."**

01. பவானந்தமூரத்தி சங்கவி, யா/இணுவில் மத்தியகல்லூரி
02. ஜெ.தவேதன், தொட்டிலடி,சங்கானை
03. மோ.மாதுரி, யா/வேலணை மத்திய கல்லூரி
04. ம.ஹிருத்திக், -
05. Fathima Zeena, Dharmapuriya, Kandy
06. பா.அஸ்வினா, -
07. மதியாபரணம் மேருயா, மன்/இலுப்பைக் கடவை தமிழ்மகா வித்தியாலயம்.
08. பா.அபிநயா -
09. ம.பானுஜன் -
10. பிருந்தாஜினி புவனேந்திரன், யா/ வேம்படி மகளிர் உயரதர பாடசாலை
11. மோ.சாருஜா, இல. 46/02, விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
12. வேலாயுதபிள்ளை ஹிசோன், நாவற்காடு, வரணி.
13. ம.டிலுக்ஷிகா, கிராம்புவில், சாவகச்சேரி.
14. சரணிகா புவீந்திரன், அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
15. ப.கயலினி, இல.எம்3, மாவடி, இராமநாதபுரம், கிளிநொச்சி.
16. சத்தியகுமார் தமிழினி, புகழேந்திநகர, நமணாங்குளம், துணுக்காய், முல்லைத்தீவு.
17. சந்திரகுமார சரண்யா, சரவணை மேற்கு, வேலணை
18. ற.சத்யசனாதன், சாயி இல்லம், அரசடி வீதி, தாவடி வடக்கு, கொக்குவில்
19. ரவிச்சந்திரன் நிஷாந்தினி, 8ம் வட்டாரம், வேலணை மேற்கு, வேலணை
20. சிவசுந்தரம் பவிசாயினி, அச்சுவேலி தெற்கு
21. வினாயகமூர்த்தி அபிவர்மன், மூங்கிலாறு வடக்கு, உடையாரகட்டு, முல்லைத்தீவு
22. கிருஸ்ணகுமார லோஜினி, இல. 19/1, தாளையடி லேன், யாழ்ப்பாணம்
23. குகேந்திரன் ஜிஸ்ணுகா, டாக்டர்.செல்லத்துரை வீதி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை
24. விவேக்கா சற்குணேஸ்வரன், இல. 47, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

**"முகத்தின் முகவரிகளைத் தொலைத்தோம்...."**

01. தர்சினி ஞானேந்திரன், இல. 30, கிருஸ்ணபிள்ளை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்
02. டி.அகல்யா, இல. 66/5, 5ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்.
03. ஸ்ரீ.சோபிகா, மூளாய் வீதி, வட்டுக்கோட்டை
04. நிலுக்ஷினா சந்திரகுமார், கலட்டி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்
05. க.பேரின்பநாயகம், இல. 17/1, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
06. ரானுகா கண்ணன், ஞானாசாரியார் வீதி, துன்னாலை மேற்கு, கரவெட்டி
07. சே.யோசப்பாலா, இல. 10/2, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
08. நா.பாரதப்பிரியா, இல. 111/4, கந்தசாமி கோவில் வீதி,திருமலை
09. ர.மதுமிதன், இல. 158/79, குட்செட் வீதி, வவுனியா.
10. தம்பிராசா சுதர்ணியா, பழைய பேக்கரி வீதி, நாகபுரம், மகிழூர், களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு.
11. அ.சேவியர் றவ்பாயெல், ஐயனார வீதி, சுன்னாகம்.
12. வ.சசிகுமார், செல்வபுரம், கச்சாய்வெளி,பளை.
13. ஸ்ரீலங்கரூபன் ஜஸ்மிகா, வுல்லியாவத்தை, கரணவாய் மேற்கு, கரவெட்டி
14. அபிவர்ண்ணா வினாயகமூர்த்தி, மூங்கிலாறு வடக்கு, உடையாரகட்டு, முல்லைத்தீவு
15. கே.எஸ்.சிவஞானராஜா, இல. 115/1, ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்
16. எஸ்.கே.கணேசவேல், பிரசித்த நொத்தாரிஸ், இல. 25, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்
17. ச.சரணியா, இல. 36/16, ஜே.சுமேதகமே, திருகோணமலை
18. புஸ்பராசா கோபிகா, சாந்தா வீதி, தையிட்டி, காங்கேசன்துறை.
19. சிவராமலிங்கம் சிந்துஜா, 4ம் வட்டரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
20. செ.சக்தீனா, ஊரெழு கிழக்கு, ஊரெழு.
21. யிகிர்தா சந்திரசேகரன், பொன்னாலை வீதி, மானிப்பாய், யாழ்ப்பாணம்.
22. டி.தமிழ்வாணி, பேராதனைப்பல்கலைக்கழகம், கண்டி
23. நருமதா சாரங்கன், அமுதசுரபி பாடசாலை வீதி, நெல்லயடி, கரவெட்டி
24. கோஜியா நவரூபன், இல. 273/07, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
25. இந்திரன், சூரிச், சுவிற்சர்லாந்து